G.C.E. ADVANCE LEVEL

அரசறிவியல்

NEW SYLLABUS

அலகு - 02

பரீட்சை வினாக்கள்

2018 - 1997

P.T.M. Ameen

BA(Pera), PGDE (Merit) , SLTS

Contact No: 0772273916

பரீட்சை வினாத்தாள் 2018

பின்வருவனவற்றுள் பிழையான கூற்றைத் தெரிவு செய்க

01. சிவில் சமூகம் என்பது
    1. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் இல்லாத எண்ணக்கருவாகும்.
    2. அரசின் கட்டுப்பாட்டுக்கு வெளியேயான சமூக வாழ்வின் ஒரு பகுதியை விபரிக்கிறது.
    3. அரசியல் சமூகத்துக்கு ஒப்பானது என அறியப்படுகிறது.
    4. குறிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான நோக்கங்களுக்காக இருக்கின்ற கூட்டுச் சமூக இணைவு என விபரிக்கப்படுகின்றது.

02. அரசியல் கட்சிகள் தொடர்பாக பிழையான கூற்றை இனங்காண்க.
    1. தேர்தல் மூலமோ அல்லது வேறுவழிகளிலோ அரசாங்க அதிகாரத்தை வெற்றி கொள்ளும் நோக்கத்திற்காக ஒழுங்கமைந்த மக்கள குழுவாகும்.
    2. சர்வதிகாரங்களில் கூட செயற்பாட்டுச் சுதந்திரத்தை அனுபவிக்கின்றன.
    3. வண்மையாளர்கள், செயற்பாட்டாளர்கள் , சாதாரணமானவர்கள் என்ற மூன்று வகையான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.
    4. ஜனநாயக அரசியல் முறைமைகளில் மக்களின் அரசியல் விருப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான செயற்பாட்டாளர் ஆகும்.
    5. பிரமுகர் (காடர்) மற்றும் மகாஜன, பிரதிநிதித்துவ மற்றும் ஒருங்கிணைந்த யாப்புரீதியான மற்றும் புரட்சிகர வலதுசாரி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன.

பரீட்சை வினாத்தாள் 2017

03. அரசியல் கட்சிகள் தொடர்பாக பிழையான கூற்றை இனங்காண்க.
    1. அரசியல் விளையாட்டின் பிரதான செயற்பாட்டாளராகும்.
    2. அரசியல் முறைமைகளின் ஜனநாயக இயல்பை அளவிடும் முக்கிய கருவியாகும்.
    3. பொதுஜன அபிப்பிராயத்தை திரட்டும் பிரதான முகவர்களாகும்.
    4. சமூக உயர்குழாமினரின் சிறப்புரிமைகளைப் பாதுகாத்துப் பேணுவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்பாகும்.
    5. சமூக சீர்திருத்தத்தின் முதன்மையான பிரதிநிதிகளாகும்.

04. அமுக்கக்குழுக்கள் தொடர்பாக பிழையான கூற்றக்களின் தொகுதியை இனங்காண்க.
    A. தனிப்பட்ட நலன்களின் மேம்பாட்டுக்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மக்கள் சங்கங்களாகும்.
    B. அனைத்தாண்மை அரசியல் முறைமைகளில் கூட செயற்படுவதற்கு முழுச் சுதந்திரத்தை அனுபவிக்கின்றன.
    C. பிழையானவையும் அடிப்படையற்றவையுமான தகவல்களை வழங்கி அரசாங்கத்தை வழிதவறச் செய்கின்றன என பெரும்பாலும் குற்றம் சாட்டப்படுகின்றன.
    D. ஜனநாயகத்தின் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு அத்தியவசியமான ஓர் அங்கமாக கருதப்டுவதில்லை.
    E. தமது நலன்களை மேம்படுத்திற்கொள்வதற்கும் அடைவதற்கும் பலவந்த வழிமுறைகளைப் பயன்படுத்தும் இரகசிய ஒழுங்கமைப்புக்களின் வகையினதாகும்.

    1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

பரீட்சை வினாத்தாள் 2015

05. சிவில் சமூகம் தொடர்பாக சரியான சேர்மானம்

A. அரசின் ஆணையதிகாரத்திலிருந்து மக்களின் சிவில் அதிகாரத்தை வேறுபடுத்திக்காட்ட பயன்படுத்தப்படும் ஓர் எண்ணக்கருவாகும்.

B. சமூகத்தின் சுயாதின குழுக்களையும் தனியார் சங்கங்களையும் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

C. அனைத்தான்மை ஆட்சிமுறைகளில் கூட பூரண செயற்பாட்டுச் சுதந்திரத்தை அனுபவிக்கிறது.

D. சமூகத்தின் சிறிய படையணிகளின் திரட்சி என அழைக்கப்படும்.

E. தாராய ஜனநாயகத்தின் ஓர் அத்தியவசியமான பண்பாக கருதப்படுகின்றது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

06. அரசியல் கட்சி தொடர்பாக பிழையான கூற்று

1. தேர்தல் வெற்றியின் மூலம் அரசியல் அதிகாரத்தினை அமுலாக்குவதனை இலக்காகக் கொண்ட மக்கள் அமைப்பாகும்.
2. உத்தியோகபூர்வ உறுப்புரிமை அட்டைகளை கொண்ட அமைப்புக்களாகும்.
3. மகாஜன மற்றும் காடர் , யாப்புசார் மற்றும் புரட்சிகர, பிரதிநிதித்துவ மற்றும் ஐக்கிய கட்சிகள் என பகுக்கப்படுகின்றன.
4. தற்கால அரசியலில் மக்களை ஒழுங்குபடுத்தும் பிரதான ஊடகங்களாகும்.
5. அரசியல் சமுதாயப்படுத்தலில் மிக முக்கிய முகவர்களுள் ஒன்றாகும்.

07. அமுக்கக் குழுக்கள் தொடர்பாக பிழையான கூற்று.

1. நலன்பேண் குழுக்கள் என்று அழைக்கப்படும்.
2. தாராள ஜனநாயகத்துக்குப் பாதகமான ஒன்றாகக் காணப்படுகின்றது.
3. தாராள ஜனநாயக அரசியல் முறைமைகளில் மட்டுமே காணப்படுகின்றது.
4. அரசாங்கத்தின் கொள்கைகளிலும் செயற்பாடுகளிலும் செல்வாக்குச் செலுத்துவதை இலக்காகக் கொண்டு ஒழுங்கமைக்கப்ப்ட சங்கங்களாகும்.
5. ஒரு குறிப்பிட்ட விடயத்தோடு அல்லது ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் நலன்களோடு கரிசனை கொள்கிறது.

பரீட்சை வினாத்தாள் 2014

08. அரசியல் கட்சி தொடர்பாக பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1. அதிகாரத்தைப் பெறுவதன் மூலம் அரசாங்க அதிகாரத்தை பிரயோகிப்பதனை இலக்காகக் கொண்டு ஒழுங்கமைந்த அமைப்புக்களாகும்.
2. முறையான அரசியல் பொருளாதார சமூகக் கருத்தியலைக் கொண்டு ஒழுங்கமைந்த அமைப்புக்களாகும்.
3. அரசையும் சிவில் சமூகத்தையும் இணைக்கும் ஒரு முக்கிய இணைகரமாகும்.
4. சமூகத்தில் சமூக மற்றும் சமயக்கருத்து முரண்பாடுகளை உருவாக்கும் மூலாதாரங்களாகும்.
5. ஒன்றிலிருந்து மற்றையதைப் பிரிக்க முடியாதளவிற்கு ஜனநாயகத்துடன் மிகநெருங்கியவையாகும்.

பரீட்சை வினாத்தாள் 2013

09. சிவில் சமூகம் பற்றி பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
    1. அரசகட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விடுபட்ட சமூகமாகும்.
    2. அரசுக்கும் குடும்பத்துக்கும் வெளிவாரியாக ஒழுங்கமைந்துள்ள நடுத்தர அமைப்புக்களைக் கொண்ட சமூகமாகும்.
    3. ஜனநாயக ஆட்சியின் ஆரோக்கியமான செயற்பாட்டுக்கு அத்தியவசியமான ஒரு காரணி என கருதப்படுகின்றது.
    4. அரசாங்க அதிகாரத்தை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தும் ஒரு பிரதான கருவி என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
    5. மக்களை அரசியல் சமூக ரீதியாகப் பலப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் ஒரு கருவியாகக் கருதப்படுகின்றது.

பரீட்சை வினாத்தாள் 2011

பிழையான கூற்றைத் தெரிவு செய்க .

10. அரசியல் கட்சிகள்
    1. அதிகாரப் போராட்டத்தின் பிரதான செயற்பாட்டாளராகும்.
    2. சமூகசீர்திருத்தத்தின் பிரதான முகவர்களாகும்.
    3. மகாஜனகட்சிகள் காடர் கட்சிகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன.
    4. ஜனநாயகச் செயற்பாட்டிற்கு அத்தியவசியமற்றவையாகும்.
    5. அரசியல் சமுதாயத்தில் முக்கிய முகவர்களாகும்.

11. அமுக்கக் குழுக்கள்
    1. ஜனநாயக அரசியலின் முக்கிய செயற்பாட்டாளராகும்.
    2. அரசாங்கத்துக்கு தகவல்களை வழங்கும் முக்கிய மூலாதாரங்களாகும்.
    3. தனிப்பட்ட நலன்களை மேமபடுத்துவதனை நோக்காக் கொண்டு ஒழுங்கமைந்தவையாகும்.
    4. நலன் பேண் குழுக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.
    5. அநேகமான நகர்ப்புற தொழிலாளர்களால் ஒழுங்கமைக்கப்படுபவையாகும்.

பரீட்சை வினாத்தாள் 2009

12. அரசியல் கட்சி தொடர்பாக சரியான சேர்மானத்தைத் தெரிவுசெய்க
    A. அரசியல் விளையாட்டில் ஈடுபடுகின்றன.
    B. தனிப்பட்ட நலன்களை விருத்தி செய்கின்றன.
    C. அரசியல் பொருளாதார கருத்தியல்களின் அடிப்படையில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றது.
    D. மக்களை அரசியல் ரீதியாக அறிவூட்டுகிறது.

    1. ABC 2.ABD 3. ACD 4. BCD

13. அமுக்கக் குழுக்கள் தொடர்பான சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
    A. தனிப்பட்ட நலன்களை மேம்படுத்துவதனை இலக்காகக் கொள்கின்றன.
    B. அதிகாரப் போராட்டத்தில் ஈடுபடுகின்றன.
    C. பொதுப் பிரச்சினைகள் மீது மக்களின் இதய துடிப்பு பற்றி விழிப்புடன் இருக்கின்றன.
    D. அரசக் கொள்கை உருவாக்கத்துக்கான தகவல்களை வழங்குகின்றன.

    1. ABC 2.ABD 3. ACD 4. BCD

பரீட்சை வினாத்தாள் 2007

14. சமூகம் தொடர்பாக பிழையான கூற்று.
    1. நிச்சயமான ஆய்புல எல்லைகளைக் கொண்ட நிலப்பிரதேசத்தில் வாழும் மக்கள் குழுவாகும்.
    2. ஒன்றாக வாழ்வதற்கு மனிதர்களுக்குள்ள விருப்பின் பெறுபேறாகும்.
    3. சகலரினதும் பொதுநலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
    4. அரசுக்கு மேம்பட்டதாகும்.

15. சமூகத் தாபனங்கள் பற்றி பிழையான கருத்து
    1. அவற்றின் உறுப்பினர்கள் மீது தனி முதன்மை அதிகாரத்தைப் பிரயோகிக்கின்றன.
    2. தனியார் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.
    3. சமூகப்பணிகளை மட்டும் நிறைவேற்றுகின்றன.
    4. சுயமான இருப்பை உடையனவன்று.

16. தேசம் தொடர்பாக பிழையான கூற்று.
    1. நிச்சயமான ஆள்புல எல்லைகளைக் கொண்ட ஒரு நிலப்பிரதேசத்தில் வாழும் மக்கள் தொகுதியாகும்.
    2. அரசியல் ரீதியாக சுயாதீனமானதாகும்.
    3. அதன் உறுப்பினர்களின் வர்ணத்தின் அடிப்படையில் அடையாளம் காணப்படுகின்றது.
    4. ஓர் இனக் குழுவை அல்லது பல இனக் குழுக்களைக் கொண்டிருக்கலாம்.

17. இறைமையின் பண்புகளில் உள்ளடங்காதது.
    1. தனிமுதன்மை
    2. மாற்றத்தக்கது.
    3. நிகரற்றது
    4. பிரிக்கமுடியாதது

பரீட்சை வினாத்தாள் 2005

18. அரசியல் கட்சிகளின் பணிகளுக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
    A. சிதறியுள்ள பொதுஜன அபிப்பிராயத்தை ஒழுங்குபடுத்தல்
    B. அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்குப் போட்டியிடுதல்.
    C. அரசியல் தலைவர்களைப் பயிற்றுவித்தல்.
    D. வாக்காளர்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்குதல்.

    1. ABC 2. BCD 3. ACD 4. ABD

19. அமுக்கக்குழுக்களுக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க
    A. அவை தனிப்பட்ட நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.
    B. அவை தமது நலகளுக்காக அரசாங்கத்தின்மீது அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.
    C. அவை அதிகார அரசியலில் ஈடுபடுகின்றன.
    D. அவை பொதுக்கொள்கை உருவாக்கத்திற்கான தகவல்களை அரசாங்கத்திற்கு வழங்குகின்றன.

    1. ABC 2. BCD 3. ACD 4. ABD

பரீட்சை வினாத்தாள் 2004

20. சங்கங்களுக்குப் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க

1. சங்கங்கள் என்பது தனிப்பட்ட நோக்கங்களுக்காக ஒழுங்கமைந்த மனித குழுக்களாகும்.
2. சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட ஆள்புலத்துக்குள்ளேயே செயற்படுகின்றன.
3. சங்கங்கள் அரசின் விருப்புக்குட்பட்டே செயற்பட வேண்டும்.
4. சங்கங்கள் என்பது விருப்புக்குரிய உரிமையைக் கொண்ட சுயச்சை நிறுவனங்களாகும்.

21. அமுக்கக் குழுக்களுக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அவை அபிப்பிராயத்தை உருவாக்கும் முகவர்களாகும்.
B. அவை பொதுக்கொள்கை உருவாக்கத்திற்கு அரசாங்கத்துக்கு தகவல்களை வழங்குகின்றன.
C. அவை தனிப்பட்ட நலன்களை மேம்படுத்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.
D. அவை அரச அதிகாரத்தை கைப்பற்றுவததை நோக்காக் கொண்ட அரசியல் ஒழுங்கமைப்புக்களாகும்

1. ABC 2. BCD 3. ACD 4. ABD

22. அரசியல் கட்சிகளுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அவை ஜனநாயகத்தின் அத்தியவசியமான கூறுகளாகும்.
B. அவை தேர்தலுக்காக அபேட்சகர்களைத் தெரிவு செய்து நிறுத்துகின்றன.
C. அவை அரசியல் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளில் மக்களை பிழையாக வழிநடாத்துகின்றன.
D. அவை அரச அதிகாரத்தைக் கைப்ப்ற்றுவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

1. ABC 2. BCD 3. ACD 4. ABD

பரீட்சை வினாத்தாள் 2003

23. அமுக்கக்குழுக்களை விளக்குவதற்குப் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க

1. அவற்றின் பிரதான நோக்கம் சமூகத்தில் உள்ள நலன்களை ஒன்று திரட்டுவதாகும்.
2. அவை குழுக்களின் நலன்களை தெளிவாக முன்வைக்கின்றன.
3. அவற்றின் வளர்ச்சியும் பரவலும் அரசியல் அபிவிருத்தியின் குறிகாட்டியாகவும் கருதப்படுகின்றது.
4. அவை அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதனை நோக்கமாகக் கொள்ளளவில்லை.

பரீட்சை வினாத்தாள் 2001

24. அரசியல் கட்சிகளின் பணிகளுக்குப் பொருந்தும் சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அவை சிக்கலான பொதுஜன அபிராயத்தை ஒழுங்குபடுத்துகின்றன.
B. அவை மக்கள் மத்தியில் அரசியல் வன்செயலை அதிகரிக்கச் செய்கின்றன.
C. அவை அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் சம்பந்தமாக மக்களை அறிவூட்டுகின்றன.
D. அவை எதிர்கால அரசியல் தலைவர்களைப் பயிற்றுவிக்கின்றன.

1. ABC 2. BCD 3. ACD 4. ABD

25. அமுக்கக்குழுக்களுக்குப் பொருத்தமான சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அவை தேர்தல் அல்லது வன்முறையினூடாக அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கின்றன.

B. அவை தனிப்பட்ட நலன்களைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தாபிக்கப்பட்டுள்ளன.

C. அவை கொள்கை வகுப்போருக்குத் தகவல்களை வழங்கும் மூலாதாரமாகச் செயற்படுகின்றன.

D. அவை அரசாங்கச் செயற்பாடுகள் பற்றி மக்களை கரிசனையுடன் இருக்கச் செய்யும் ஊடகமாக செயற்படுகின்றன.

1. ABC 2. BCD 3. ACD 4. ABD

பரீட்சை வினாத்தாள் 1999

அரசியல் கட்சிகள், அமுக்கக்குழுக்கள் தொடர்பான சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கவனமாக வாசித்து 26ஆம் 27ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A. நலன்களைத் தெரிவுசெய்து குறைத்து மொத்தமாக்கிறது.

B. பாதுகாத்து முன்னேற்றும் ஒழுங்கமைப்புக்கள் எனக்கொள்ளப்படுகின்றன.

C. அவற்றின் பன்மைத் தன்மை மேலான அரசியல் அபிவிருத்திகளின் ஒரு அடையாளமாகக் கொள்ளப்டுகின்றது.

D. அதிகாரத்தை கைப்பற்றுவது ஒரு நோக்கமல்ல.

E. அதிகாரத்தை கைப்பற்ற முயலும் ஒழுங்கமைப்புக்கள்.

F. ஆளுபவர்களுக்கும் ஆளப்படுவோருக்குமிடையில் நேரடித் தொடர்பினை ஏற்படுத்துகிறது.

G. பொதுக்கொள்கை மீது செல்வாக்குச் செலுத்த முயலும் குழுக்கள்.

H. தலைவர்களை ஆட்சேர்த்துப் பயிற்சி வழங்கும் முகவர்களாக செயலாற்றுதல்.

26. அரசியல் கட்சிகள் பிரயோகிக்கும் இயல்புகளைத் தரும் சேர்மானத்தை அடையாளம் காண்க.

1. ABDF 2. CEFG 3. HAFB 4. AEFH

27. அரசியல் கட்சிகள் பிரயோகிக்கும் இயல்புகளைத் தரும் சேர்மானத்தை அடையாளம் காண்க.

1. CDGH 2. ABEF 3. BCDG 4. DEFG

குறுவினாக்கள்

பரீட்சை வினாத்தாள் 2016

01. கீழ்வரும் கூற்றின் மூலம் விபரிக்கப்படும் சமூக ஒழுங்கமைப்பையும் இரண்டாம் கூற்றின் மூலம் விபரிக்கப்படும் அரசியல் ஒழுங்கமைப்பையும் முறையே பெயரிடுக

அது பொதுவான இனத்தையும், பொதுவான அரசையும், பொதுவான வாழிடத்தையும், பொதுவான மொழியையும், பொதுவான வரலாற்றுப் பாரம்பரியத்தையும் , பொதுநலன்களையும், பொதுவான அரசாங்கத்தையும் , புவியியல் ஐக்கயத்தையும் கொண்டமைந்ததாகும்.

'' அது ஆள்புலம், மக்கட் தொகை, அரசாங்கம், இறைமை ஆகிய நான்கு அத்தியவசியக் கூறுகளைக் கொண்டதாகும் இந்நான்கு கூறுகளும் நிலவும் போது அதன் இருப்பு நிகழும்''

.....

.....

பரீட்சை வினாத்தாள் 2015

02. அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவது பிரதான நோக்கம்.

அரசியல் அதிகாரத்தை கையாள்பவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதனூடாகத் தனிப்பட்ட நலன்களை மேம்படுத்துவதே பிரதான கரிசனையாகும்.

மேற்குறிப்பிட்ட இரு கூற்றுக்களுக்கும் பொருந்தும் இருவகை ஒழுங்கமைப்புக்களை முறையே குறிப்பிடுக.

.....

.....

பரீட்சை வினாத்தாள் 2013

03. பண்புசார் காரணிகளின் அடிப்படையில் அரசியல் கட்சிகளை இரண்டுவகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவ்விரு வகைகளையும் தருக.

.....

.....

பரீட்சை வினாத்தாள் 2011

04. அரசியல் கட்சிகள் பல பணிகளை நிறைவேற்றுகின்றன. அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக.

.....

.....

பகுதி ii

பரீட்சை வினாத்தாள் 2018

01. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டை விபரிக்குக.
    1. சிவில் சமூகம்

பரீட்சை வினாத்தாள் 2016

02. ஜனநாயக ஆட்சியில் பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் வகிபாகத்தை பரிசீலிக்குக.
    1. சிவில் சமூகம்
    2. அரசியல் கட்சிகள்

பரீட்சை வினாத்தாள் 2015

03. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டை ஆராய்க
    1. ஒரு சனநாயக அரசியல் முறைமையில் அரசியல் கட்சிகளின் பணிகள்
    2. அமுக்கக் குழுக்களின் பணிகள்
    3. ஜனநாயக அரசியலில் சிவில் சமூகத்தின் வகிபங்கு.

பரீட்சை வினாத்தாள் 2011

04. சிவில் சமூகம

பரீட்சை வினாத்தாள் 2008

05. பின்வருவனவற்றை ஆராய்க
    1. அரசியல் கட்சிகளின் வகைப்படுத்தல்
    2. அரசியல் கட்சிகளின் பணிகள்
    3. அரசியல் கட்சிகளின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்.

06. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றை ஆராய்க
    1. சிவில் சமூகம

பரீட்சை வினாத்தாள் 2007

07. அரசியல் கட்சிகளின் பின்வரும் பணிகளைப் பரசீலிக்குக.
    1. சிதறியுள்ள பொதுசன அபிப்பிராயத்தை ஒன்று திரட்டுதல்
    2. வாக்காளர்களுக்கு அரசியல் ரீதியாக அறிவூட்டுதல்
    3. சமூகத்தை நவீனப்படுத்தல்.

08. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றை ஆராய்க
    1. அமுக்கக் குழுக்கள்

பரீட்சை வினாத்தாள் 2006

09. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றை ஆராய்க
    1. அரசியல் கட்சயின் பணிகள்

பரீட்சை வினாத்தாள் 2005

10. பின்வருவனவற்றை பரிசீலிக்குக.
    1. அரசியல் கட்சி முறைகளை வகைப்படுத்தல்
    2. பலகட்சி முறையின் குறை நிறைகள்
    3. இரு கட்சி முறையின் குறை நிறைகள்

பரீட்சை வினாத்தாள் 2004

11. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றை ஆராய்க
    1. அரசியல் கட்சிகளின் பணிகள்
    2. தேசியவாதம்

பரீட்சை வினாத்தாள் 2003

12.
    1. அரசியல் கட்சியை நீர் எவ்வாறு வரைவிலக்கணப்படுத்துவீர்.
    2. அரசியல் கட்சிகளின் பிரதான பணிகளைக் குறிப்பிடுக.

பரீட்சை வினாத்தாள் 2001

13. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றை ஆராய்க
    1. அரசியல் கட்சிகளை பாகுபாடு செய்தல்

விடைகள்

1 - 1	2 - 2	3 - 4	4 - 2	5 - 3
6 - 1	7 - 2	8 - 4	9 - 1	10 - 4
11 - 5	12 - 3	13 -3	14 - 4	15 - 1
16 - 3	17 - 2	18 - 1	19 - 4	20 - 2
21 - 1	22 - 4	23 - 1	24 - 3	25 - 2
26 - 4	27 - 3			

1. தேசம்
   அரசு

2. அரசியல் கட்சி
   அமுக்கக்குழுக்கள்

3. மகஜனக் கட்சி
   காடர் கட்சி (பிரமுகவர்கள் கட்சி)

4.
   - பிரதிநித்துவம்
   - அரசியலில் உயர்குழாம் உறுப்பினர்களை உருவாக்குதல்
   - சமூக குழுக்களின் அரசியல் நோக்கங்களை உருவாக்கல்
   - பொதுமக்களின் அபிலாசைகளை அரசியல் செயற்பாட்டிற்கு கொண்டு செல்லுதல்.˙.
   - பொதுமக்களை அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்
   - அரசாங்கத்தின் செயற்பாட்டை ஒழுங்கமைத்தல்.